**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05 -ஆம் நாள் வெள்ளிகிழமை

CC. No. 338 of 2026

CNR No. TNTV15-001028-2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 500/2024. --- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

திரு. முத்துக்குமார், வயது 49/2026,
த/பெ. வெங்கடாச்சலம்,
மெயின் ரோடு,
சாலியமங்கலம். --- எதிரி

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.338 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by<br>Sub-Inspector of Police, Kodavasal PS. in Cr.No.500/2024 |
| 3. | Name of the accused | V.Muthukumar |
| 4. | Father's Name | S/o. Venkatachalam |
| 5. | Occupation | - |
| 6. | Residence | Main Road,<br>Saliyamangalam. |
| 7. | Age | 49/2026 |



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:54:44 +0530

<table>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">21.12.2024</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">21.12.2024<br>21.12.2024</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">-</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">-</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 230 BNSS.</td><td colspan="3">16.04.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 16.04.2026 the accused questioned on substance of accusation U/s.4(1)(C) TNP Amendment Act. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="3">15</td><td rowspan="3">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
<tr><td>PW2</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 351of the BNSS – Closed of trial</td><td colspan="3">25.05.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Amendment Act-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
<tr><td>18.</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td colspan="3">No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts</td></tr>
<tr><td>19.</td><td>Explanation of delay</td><td colspan="3">There is no inordinate in the disposal of</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:54:49 +0530

| | | |
|---|---|---|
| | | the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் :-**

1. கடந்த 21.12.2024 ந் தேதி 16.00 மணிக்கு குடவாசல் காவல் சரகம் சாலியமங்கலம் மெயின் ரோடு அருகே இவ்வழக்கின் எதிரி எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் 180 ml அளவுள்ள பாண்டிச்சேரி GREEN LABLE BRANDY -08 பாட்டில்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்து தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் BNSS பிரிவு 230-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது, எதிரி மீதான குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:54:53 +0530

முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1, திரு. சிவானந்தம், அவரது சாட்சியத்தில், தான் தற்போது நன்னிலம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 21.12.2024 ம் தேதி அன்று மாலை 16.00 மணிக்கு நான் குடவாசல் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோது காவல் உதவி ஆய்வாளர் திரு. ஜெய்சங்கர் என்பவருடன் தானும் முதல்நிலைக்காவலர் திரு. பாரதிராஜன் ஆகியோர்கள் மதுவிலக்கு சம்பந்தமாக கண்காணித்து வந்த போது சாலியமங்களம் மெயின்ரோடு அருகே சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த நபர் தங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை மேற்படி காவல் உதவி ஆய்வாளர் மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் வெங்கடாஜலம் மகன் முத்துகுமார் என்று கூறினார் என்றும், மேலும் மேற்படி நபர் நின்று கொண்டிருந்த இடத்தை காவலர் உதவி ஆய்வாளர் சோதனை செய்தபோது சுமார் 180 மி.லி. பிடிக்கக்கூடிய பாண்டிச்சேரி Green lable Brandy பாட்டில்கள் 8 இருந்தது. அதை மேற்படி



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:54:57 +0530

உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்த போது அவர் வைத்திருப்பதற்கு அனுமதியும், உரிமமும் இல்லை என்று கூறினார் என்றும், பின்னர் எதிரியை குற்றம் காரணம் கூறி மாலை 16.15 மணிக்கு அதே இடத்தில் கைது செய்தார் என்றும், பின்னர் மேற்படி எதிரி வைத்திருந்த தடயப்பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் 16.30 மணியளவில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், மேற்படி உதவி ஆய்வாளருடன் சென்ற நானும் முதல் நிலைக் காவலர் பாரதிராஜன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்பு எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை 16.45 மணியளவில் சம்பவயிடத்திலேயே கொட்டி அழித்து அழிப்பு மகசர் மேற்படி உதவி ஆய்வாளர் தயார் செய்தார் என்றும், அதிலும் தானும் முதல் நிலைக் காவலர் பாரதிராஜன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், **அழிப்பு மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 500/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம் என்றும், உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2, திரு. திரு. சூர்யமூர்த்தி, அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:01 +0530

வருகிறேன் என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. ஜெய்சங்கர் என்பவர் தற்போது பணி மாறுதல் காரணமாக தற்போது மயிலாடுதுறையில் உதவி ஆய்வாளராக இருந்து வருவதாலும், மேற்படி உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும், நீதி நலன் கருதி கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு தான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 21.12.2024 ந் தேதி குடவாசல் காவல் நிலையத்தில் பணியிலிருந்த உதவி ஆய்வாளர் திரு. ஜெய்சங்கர் என்பவருடன் காவலர் திரு.சிவனாந்தம் மற்றும் காவலர் திரு.பாரதிராஜன் ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக குடவாசல் காவல் சரகம் சாலியமங்கலம் மெயின்ரோடு அருகே நின்று கொண்டிந்த நபர் அவர்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை மேற்படி காவல் உதவி ஆய்வாளர் மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் வெங்கடாச்சலம் மகன் முத்துக்குமார் என்று கூறியுள்ளார் என்றும், மேலும் மேற்படி நபர் நின்று கொண்டிருந்த இடத்தை காவல் உதவி ஆய்வாளர் சோதனை செய்தபோது சுமார் 180 மி.லி. பிடிக்கக்கூடிய GREEN LABLE BRANDY பாட்டில்கள் 08 இருந்தது என்றும், அதை மேற்படி உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்த போது அவர் வைத்திருப்பதற்கு அனுமதியும், உரிமமும் இல்லை என்று கூறியுள்ளார் என்றும், பின்னர் எதிரியை குற்றம் காரணம் கூறி 16.15 அளவில் அதே இடத்தில் கைது செய்துள்ளார் என்றும், பின்னர் மேற்படி எதிரி வைத்திருந்த தடயப்பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் 16.30 மணியளவில் உதவி ஆய்வாளர் கைப்பற்றியுள்ளார் என்றும், தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், மேற்படி உதவி ஆய்வாளருடன் சென்ற காவலர் திரு. சிவானந்தம் மற்றும்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:05 +0530

காவலர் திரு.பாரதிராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் தடயப் பொருட்களை கைப்பற்றியுள்ளார் என்றும், தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உதவி ஆய்வாளரால் தயார் செய்யப்பட்டது என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்பு எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை 16.30 மணியளவில் சாட்சிகள் காவலர் சிவானந்தம் மற்றும் பாரதிராஜன் ஆகியோர் முன்னிலையில் கொட்டி அழித்துள்ளார் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசர் மேற்படி உதவி ஆய்வாளர் தயார் செய்யப்பட்டது என்றும், அந்த அழிப்பு மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 500/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், பின்னிட்டு எதிரியை தக்க பிணையில் விடுவித்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1, 2 ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 4(1)( C) TNP Amendment Act ன் கீழ் தண்டிக்க தக்க குற்றம் என கடந்த 21.12.2024 ஆம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு எதிரான சாட்சியம் பற்றி எதிரியிடம் பிரிவு BNSS 351-ன் கீழ் வினவ எதிரி " பொய் சாட்சி " என்று மறுத்து விட்டார். தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:09 +0530

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் அதிகபட்ச தண்டனை அளிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்** :-

12. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களும், அ.சா.1 மற்றும் அ.சா.2 -ன் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது, சம்பவ இடத்தில் எதிரி 750 ml பிடிக்ககூடிய PONDY MANSION HOUSE BRANDY பாட்டில்கள் 02 இருந்ததாகவும், அரசு உரிமம் மற்றும் அனுமதி இல்லை என்றும் காரணம் கூறி எதிரியை கைது செய்தும், தனி நபர் சாட்சிகள் இல்லாததால் போலீஸ் சாட்சிகள்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:13 +0530

முன்னிலையில் கைப்பற்றப்பட்டு இவ்வழக்கின் காவல் உதவி ஆய்வாளரால் மதுபாட்டில்களை சம்பவ இடத்திலேயே அழிக்கப்பட்டது என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

13. அரசு தரப்பில் எதிரியிடமிருந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 180 ml அளவுள்ள பாண்டிச்சேரி GREEN LABLE BRANDY -08 ஐ பிடித்ததற்கு ஆதரவாக தனி நபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை. மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் 180 ml அளவுள்ள பாண்டிச்சேரி GREEN LABLE BRANDY -08 ஐ காவலர்கள் சிவானந்தம் மற்றும் பாரதிராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளரால் அழிக்கப்பட்டதாக கூறுகின்றனர் அதற்கான காவல்துறை நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. மேலும், பிரிவு 32(c) தமிழ்நாடு மதுவிலக்கு அமலாக்க சட்டத்தை உற்று நோக்கும்போது, அச்சட்டப்பிரிவு பின்வருமாறு வரையறை செய்கிறது.

**Sec. 32(c) of the TNP Act reads as follows :-**

> *(c) May search any person, vessel, vehicle, animal package, receptacle or covering, upon whom or in or upon which, he may have reasonable cause to suspect any such liquor, drug or other article to be or to be concealed:*
>
> *[Provided also that where any [illicit arrack] is seized under this section by any officer or person, such officer or person may, in the presence of a **Prohibition Officer or any Police officer not below the rank of Inspector,---***
>
> *(i) take two samples of the [illicit arrack] or such quantity and in such manner as may be prescribed, and*
>
> *(ii) destroy or cause to be destroyed the [illicit arrack] and send the pots or other receptacles in which the [illicit arrack] was*



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:19 +0530

*kept together with the samples taken and a certificate from the Officer in whose presence the samples were taken and the [illicit arrack] was destroyed, as to the total quantity of [illicit arrack] seized, the total quantity taken as samples and the total quantity destroyed, to the Magistrate having jurisdiction to inquiry into the case. The Magistrate shall, upon the receipt of the samples, retain one in his Court and send the other to such Officer as may be prescribed for chemical Analysis* என்று கூறப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32-ன் படி மது அழிக்கப்படுவதற்கு, மாதிரிகள் எடுக்கப்படுவதற்கு, உரிய சான்றிதழ் தயாரிப்பதற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ***Selvi – vs – State Rep. by on 18 March 2011* என்ற வழக்கில்,** பின்வருமாறு கூறியுள்ளது.

*"It has been stated "A close reading of the above third provision to section 32(C) of the TN Prohibition Act would make it abundantly clear that the officer who has **seized** the illicit arrack can take samples only in **the presence of a Prohibition Officer or any Police Officer not below the rank of an Inspector of Police and then he can destroy the remaining contraband**". In respect of the destruction, the said Prohibition Officer or Police Officer, in whose presence the destruction is done. Should give a certificate in respect of the total quantity seized the total quantity taken as samples and total quantity destroyed and such certificate should be forwarded to the Magistrate having Jurisdiction. But in this case, drawing of samples as well as the destruction were not made in the presence of either a Prohibition officer or any Police officer not below the rank of an Inspector of Police. It may be true that*



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:23 +0530

***PW2 himself is an Inspector of Police but that by itself will not satisfy the requirements of the above provision.*** *Here, we have to look into the object behind the said proviso, In the case where the officer, who seizes illicit arrack, decides to destroy the same after drawing samples, in order to ensure that samples were really taken from illicit arrack seized and the rest of the illicit arrack was destroyed, the presence of* ***yet another responsible officer*** *namely a Prohibition Officer or any Police Officer not below the rank of Inspector is insisted upon. This Procedure in my considered opinion, is mandatory as the object behind the same is to ensure that there is no manipulation at the hands of the officer who seized the illicit arrack"* என்று சொல்லப்பட்டுள்ளதிலிருந்து இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களை பார்க்கும்பொழுது, அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது முதல் விசாரணையில், கைப்பற்றப்பட்ட சாராயத்தை பாதுகாப்பாக சம்பவ இடத்திலேயே உதவி ஆய்வாளர் கொட்டி அழித்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

14. எனவே, இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32-ல் கூறியுள்ளபடி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மொத்த சான்று பொருட்களானது முறையாக ஒரு அமலாக்க அலுவலர் முன்னிலையில் அழிக்கப்பட்டதாகவோ, அவ்வாறு அழிக்கப்பட்டதற்காக சான்று தயாரிக்கப்பட்டதாகவோ, அவ்வாறு தயாரிக்கப்பட்ட சான்றை சம்பவயிட ஆளுகைக்குட்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவோ எவ்வித சாட்சியமும் இல்லை என்பதும், அதனால் மேற்படி சட்டப்பிரிவு 32 பின்பற்றப்படவில்லை என்பது தெளிவாகிறது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட மதுபாட்டிலகள் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:27 +0530

பிரிவு 32-ன் கீழ் மற்றொரு சிறப்பு உதவி ஆய்வாளர் முன்னிலையில் அழிக்கப்பட்டு சான்றிடப்படவில்லை. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சாராயத்தை இவ்வழக்கின் உதவி ஆய்வாளர் அழித்துள்ளார். மேலும், எதிரி கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து சாராயம் கைப்பற்றப்பட்டதற்காக தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1-ஐ நிரூபிக்கும் வகையில் தனிநபர் சாட்சியம் யாரும் கையொப்பம் செய்யவில்லை. சம்பவ இடம் மக்கள் அதிகம் நடமாடும் இடமாக இருந்தாலும், எதிரியை அடையாளப்படுத்த தனிநபர் சாட்சியம் யாரும் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்பதிலிருந்தும், சம்பவயிடம் குறித்து பார்வை மகசரோ, மாதிரி வரைபடமோ இவ்வழக்கில் தயார் செய்யப்படவில்லை போன்ற குறைபாடுகள் அரசுத்தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தி அதை நம்பகத்தன்மையற்றதாக செய்கிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வது உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

15. எனவே, இவ்வழக்கில் எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(c) TNP Amendment Act-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**உத்தரவு**

16. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C)



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:31 +0530

TNP Amendment Act-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. எதிரி எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 05-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சிவானந்தம், தலைமைக் காவலர் |
| அ.சா.2 | திரு. சூர்யமூர்த்தி, காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 21.12.2024 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.2 | 21.12.2024 | அழிப்பு மகசர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 21.12.2024 | முதல் தகவல் அறிக்கை |

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | -- | | |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 01.08.2025 | | |
| 3. | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 16.04.2026 | | |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | அரசு தரப்பில் BNSS 348 ன் கீழ் 25.05.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது. | | |
| 5. | சாட்சிகள் விசாரணை | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | PW1 | 25.05.2026 | 25.05.2026 |
| | | PW2 | 25.05.2026 | 25.05.2026 |
| 6. | BNSS பிரிவு 351-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 26.05.2026 | | |
| 7. | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம் | இல்லை. | | |

| | | |
|---|---|---|
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | இல்லை. |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.05 04:55:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.